நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 237/2025

வழக்கு சாட்சி : PW 2 (LW2)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தமிழ்செல்வன் | தொழில் | : |
| தந்தை பெயர் | : பாலமுருகன் | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : 23 / 2025 |
| தாலுக்கா | : | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **16.07.2025**

(<u>எதிரி ஆஜர்.)</u>

**<u>முன் விசாரணை :</u>**

நான் தற்சமயம் கிருஷ்ணகிரியில் வசித்து ஓரத்தூர் அரசு மருத்துவக்கல்லூரியில் இரண்டாமாண்டு படித்து வருகிறேன். கடந்த 05.02.2025ம் ஆண்டு நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் பயிற்சி வகுப்பை முடித்து விட்டு மீண்டும் 11.30 மணியளவில் எனது நண்பர் விண்ணரசன் இருசக்கர வாகனத்தை ஓட்டினார். நான் அவருக்கு பின் அமர்ந்து மீண்டும் எங்களது கல்லூரிக்கு இடது புற ஓரமாக மெதுவாக சென்று கொண்டிருந்தோம். மருந்து கொத்தளரோடு அருகே சென்று கொண்டிருந்த போது எதிர்திசையில் அதிவேகமாக வந்த டிராக்டர் எங்களது வாகனத்தின் மீது மோதியது. அந்த டிராக்டரின் பதிவு எண் TN513832 ஆகும். விபத்தில் விண்ணரசனுக்கு தலையில் அடிபட்டு கீழே விழுந்துவிட்டார். எனக்கும் தலையில் அடிபட்டு கீழே விழுந்துவிட்டேன். ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய டிராக்டரை ஓட்டி வந்த நபர் ஆவார். விண்ணரசன் இறந்து விட்டார். அடிபட்ட என்னை முதலில் ஆம்புலன்ஸ் மூலம் ஓரத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தேன். நான் ஓரத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முன் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் எனது போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரி. நான் சென்ற இருசக்கர வாகனம் தான் நிலைதடுமாறி விழுந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் தினமும் அதே வழியில் தான் பயணம் செய்வோம். எதிரே வந்த டிராக்டர் தான் எங்கள் பக்கமாக வந்து விபத்தை ஏற்படுத்தியது. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதன் படி பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் நான் சுயநினைவில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் நான் சுயநினைவோடு தான் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் எனது முன்விசாரணைக்கும், போலீசார் வாக்குமூலத்திற்கும் இடையே முரண்பாடுகள் காணப்படுகிறது என்றால் சரியல்ல. நான் போலீசார் சொல்லி கொடுத்ததன் படி ஆஜர் எதிரி மற்றும் அவர் இயக்கிய டிராக்டர் விபத்து ஏற்படுத்தியது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.